காணொலிக் காட்சி வாயிலாக

# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்

## பொதுச் செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம் இன்று (05.08.2023 - சனிக்கிழமை) காலை 10.30 மணி அளவில், காணொலிக் காட்சி வாயிலாக நடைபெறுகிறது. அதுபோது மாவட்டக் கழகச் செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்: தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா.**

"அண்ணா அறிவாலயம்"
சென்னை -600 018

**துரைமுருகன்,**
பொதுச் செயலாளர்
தி.மு.க.



முதலமைச்சர் அவர்களின் அறிவுத்தலின்படி, சென்னை அருகே அதிநவீன திரைப்பட நகரம் அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் அமைக்கப்படும் என 2023–2024ஆம் ஆண்டிற்கான செய்தித் துறை மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அவ்அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக இடம் தேர்வு செய்யும் பொருட்டு திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி வட்டம், குத்தம்பாக்கம் ஊராட்சி பகுதியில் நேற்று (04.08.2023) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் முதலமைச்சரின் செயலாளர் முனைவர்.எம்.எஸ். சண்முகம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் மரு.இரா.செல்வராஜ் , செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ் , பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, மாவட்ட வருவாய் அலுவலர் சு. அசோகன், செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர் (மக்கள் தொடர்பு) திருமதி.சாந்தி, கூடுதல் இயக்குநர் (பொ) இணை இயக்குநர் (நினைவகம்) தமிழ் செல்வராஜன் , மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் ராஜவேல், பூவிருந்தவல்லி வட்டாட்சியர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், நில அளவை ஆய்வாளர்கள் மற்றும் பல்வேறு துறை அரசு அலுவலர்கள் உள்ளனர்.

காவலர்களின் குழந்தைகளுக்கு வழங்கப்படும்

# சிறப்பு கல்வி உதவித்தொகை – கல்வி பரிசுத்தொகை உயர்வு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, ஆக.5-

காவலர்களின் குழந்தைகளுக்கு வழங்கப்படும் சிறப்பு கல்வி உதவித்தொகை மற்றும் கல்விப் பரிசுத்தொகையை உயர்த்தி வழங்குவதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு:-

காவலர்களின் குழந்தைகளுக்கு சிறப்பு கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் மூலம் தற்போது 100 மாணவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு தலா 25 ஆயிரம் ரூபாய் வீதம் 4 வருடங்களுக்கு வழங்கப்படுவது, எண்ணிக்கை உயர்த்தப்பட்டு 200 மாணவர்களுக்கு 30 ஆயிரம் ரூபாய் வீதம் வழங்கப்படும் என்றும், காவலர்களின் குழந்தைகளுக்கு கல்விப் பரிசுகள் வழங்கும் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் பரிசுத் தொகை இரட்டிப்பாக்கப்படும் என்றும் 2023-24-ஆம் ஆண்டிற்கான காவல்துறை மானியக் கோரிக்கையின் போது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில், காவலர்களின் குடும்பத்தைச் சார்ந்த 200 மாணவர்களுக்கு தலா 30 ஆயிரம் ரூபாய் வீதம் 4 வருடங்களுக்கு மொத்தம் ரூ.2.4 கோடியில் சிறப்பு கல்வி உதவித் தொகை வழங்கிடவும், மேலும், 37 காவல் மாவட்டங்கள் மற்றும் 9 காவல் ஆணையரகங்களில் பணிபுரியும் காவலர்களின் குழந்தைகளுக்கு கல்விப் பரிசுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் முறையே முதல் பத்து இடங்களைப் பெறும் 460 மாணவ, மாணவியர்களுக்கு தற்போது வழங்கப்படும் மொத்த கல்விப் பரிசுத்தொகையை ரூ.28,29,000/ல் இருந்து ரூ.56,58,000/ஆக இரட்டிப்பாக்கி கல்விப்பரிசுகள் வழங்கவும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

உயர்த்தப்பட்ட சிறப்பு கல்வி உதவித்தொகை மற்றும் கல்விப்பரிசுகள் வழங்குவதால் ஏற்படும் கூடுதல் செலவினத்திற்காக, தமிழ்நாடு காவலர் நல நிதிக்கு அரசால் தற்போது வழங்கப்பட்டு வரும் மானியத் தொகையினை ரூ.1.2 கோடியிலிருந்து ரூ.2,96,58,000/ ஆக உயர்த்தியும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இவ்வாறு தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு - தயாநிதிமாறன் எம்.பி., முன்னிலை! இசட் ஆசாத் தலைமை!

# துறைமுகம் கிழக்கு பகுதியில் - கருணை இல்லங்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா!

## பேரூர் ஆதினம் ஸ்ரீ சாந்தலிங்க மருதாசல அடிகளார் வழங்குகிறார்!

சென்னை, ஆக. 5-

சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் கிழக்கு பகுதியில் கலைஞர்100, 23வது நிகழ்ச்சியாக "அன்பு காட்டுதல் கலைஞரின் குணம் அவர் வழியில் உயரும் நம் இனம் தலைப்பில் கருணை இல்லங்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா 06.08.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 04.00 மணியளவில், சென்னை, நாராயணப்பா தெரு, மியாசிபள்ளி வளாகத்தில் நடைபெறுகிறது.

இவ்வவிழாவிற்கு மாவட்ட பொருளாளர் இசட்.ஆசாத், எம்.சி. தலைமை வகிக்கிறார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத் துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர் பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், எஸ். இராஜசேகர், எஸ்.முரளி, எம். விஜயகுமார், ஜி.எம். தேவன், ப.ஸ்ரீராமுலு, என். பி.எம்.ஷேக் அப்துல்லா, எம்.இப்ராஹிம் கனி, இரா. கலைச்செல்வி, பி.விஜய குமார், எம்.விநாயகம், பா. பிரதீப்குமார், எல்.சம்பத்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். ந.சுந்தரம், எஸ்.சந்தியாகு, செ.தமிழ்வாணன், வி.சந்தான லட்சுமி, சி.ப.ஜெயராமன், மே.ஜனார்த்தனன், கே.ஆர். அபரஞ்சி, ம.முத்துகுமார், கே.சரஸ்வதி, எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர். இ.அஸ்லாம், த.கதிரவன், எம்.பரத்குமார், மா.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.ரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, சேப்பாக்கம். வே.பா.பிரபாகரன், டி. சதீஷ்குமார் ஆகியோர் வரவேற்று பேசுகின்றனர்.

இவ்நலத்திட்ட விழாவில் திரு.கைலாயமரபு மெய்கண்ட சந்தானம் பேரூராதினம் ஸ்ரீ சாந்தலிங்க மருதாசல அடிகளார் அவர்கள் 10 கருணை இல்லங்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பிக்கிறார்.

மேலும் இவ்விழாவில் மேயர்.பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் ப. தாயகம் கவி. அ.வெற்றி அழகன், ஜோசப் சாமுவேல், இ.பரந்தாமன், ப. ரங்கநாதன், கே.எஸ்.ரவிச்சந்திரன், பி.கே.மூர்த்தி, கே.சந்துரு, சங்கரி நாராயணன், எஸ்.மணிமுடி, கே.எஸ்.எம்.நாதன், வே.உமாகாந்த் , பரிதிஇளம்சுருதி,எம்சி, கோ.ஏகப்பன், தேவஜவஹர், புனிதவதி எத்திராசன், ஐசிஎஃப். வ. முரளிதரன், எ.நாகராசன், சொ.வேலு, வி.சுதா கர், செ.தமிழ்வேந்தன், எம்.சாமிக்கண்ணு, வே.வாசு, கூ.பி.ஜெயின், எம்.சி., டி.எஸ்.பி.ராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ், மாமன்ற உறுப்பினர்கள், வே.பரிமளம், எல்.நவீன் ராஜேஷ் ஜெயின் ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கிறார்கள்.

60, 60 அ வட்டக் கழக செயலாளர்கள் ஆ.நா. பார்த்திபன், க.கவியரசு ஆகியோர் நன்றி கூறுகிறார்கள்.

தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் முத்தமிழறிஞர் கலைஞர் 5 ஆம் ஆண்டு நினைவு பேரணி!

# காஞ்சி வடக்கு மாவட்டக் கழகத்தினர் ஆயிரக்கணக்கில் திரண்டு வாரீர்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

காஞ்சிபுரம், ஆக.5-

முத்தமிழறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 5 ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி, திராவிட மாடல் அரசின் நாயகர் ஒப்பற்ற முதல்வர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நாளை மறுநாள் (7.8.2023) காலை சென்னையில் நடைபெறும் மாபெரும் அமைதிப் பேரணியில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகத்தினர் ஆயிரக்கணக்கில் திரண்டிடுமாறு மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான தா.மோ.அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவரது வேண்டுகோள் வருமாறு :

14 வயதில் தமிழ்க்கொடியேந்தி, தமிழ் வாழ்க என முழக்கமிட்டு பொது வாழ்வைத் துவக்கியவர் முத்தமிழ் வித்தகர் கலைஞர் அவர்கள்!

தகைமைசால் தலைவராக - எழுத்தாளராக - கவிஞராக - சொற்பொழிவாளராக - திரைக்கதை வசன கர்த்தாவாக - இலக்கியவாதியாக - திரைப்படத் தயாரிப்பாளராக - தலைசிறந்த நிர்வாகியாக - தமிழகத்தின் ஐந்து முறை முதலமைச்சராக - உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக விளங்கியவரும், திராவிட இயக்கத்தின் போர்வாட்களில் ஒருவராகத் தமது பொதுவாழ்வைத் தொடங்கி, பின்னர், காஞ்சி தந்த காவியத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களோடு திராவிட முன்னேற்றக் கழகத்தில் தொடர்ந்து பணியாற்றி, அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக ஏறத்தாழ 50 ஆண்டுகள் பொறுப்பு வகித்து, அகில இந்திய அரசியலில் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்து, தமிழக வரலாற்றில் தமக்கென்று சில பக்கங்களை ஒதுக்கிக்கொண்ட முத்தமிழறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 5 ஆம் ஆண்டு நினைவு நாளினையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி., முதன்மைச் செயலாளர், துணைப் பொதுச்செயலாளர்கள் உள்ளிட்ட கழக முன்னணியினர் கலந்து கொள்ளும் "அமைதிப் பேரணி", ஆகஸ்ட் 7, திங்கட்கிழமை அன்று காலை 8.00 மணிக்கு சென்னை, அண்ணா சாலை, ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலை அருகிலிருந்து புறப்பட்டு, காமராஜர் சாலையில் அமைந்துள்ள கலைஞர் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்துவர். அமைச்சர் பெருமக்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள் முன்னாள் - இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள் உள்ளிட்டோர் இந்தப் பேரணியில் பங்கேற்கின்றனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவைப் போற்றி பேரணியாகச் சென்று அயரா உழைப்பாளி அன்புத் தலைவர் முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அஞ்சலி செலுத்தவுள்ள இந்நிகழ்ச்சியில் மாவட்ட, ஒன்றிய, நகரக் கழகச் செயலாளர்கள், கழக நிர்வாகிகள் செயல்வீரர்கள் உள்ளிட்ட காஞ்சிவடக்கு மாவட்டக் கழகத்தினர் ஆயிரக்கணக்கில் திரண்டு வாரீர்!

இவ்வாறு மாவட்டச் செயலாளர், அமைச்சர் தா. மோ.அன்பரசன் கேட்டுக் கொண்டுள்ளார்.

# புதுச்சேரி முதல்வர் என்.ரங்கசாமி பிறந்தநாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!



சென்னை, ஆக,5-

புதுச்சேரி முதலமைச்சர் என்.ரங்கசாமி அவர்களின் பிறந்தநாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-

**புதுச்சேரி முதலமைச்சர் என்.ரங்கசாமி அவர்களது பிறந்தநாளில் அவர் என்றும் மகிழ்ச்சியுடனும் நல்ல உடல்நலத்துடனும் திகழ எனது நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# பத்திரிகையாளர்களுக்கு நிதி உதவி உண்டு; வீட்டுமனை வழங்கும் திட்டம் இல்லை!

## டாக்டர் கனிமொழி - என்.வி.என். சோமு கேள்விக்கு ஒன்றிய அரசு பதில்!

புதுடெல்லி, ஆக. 5-

நோய் மற்றும் விபத்து காரணமாக உயர்சிகிச்சை தேவைப்படும் அல்லது உயிரிழக்கும் பத்திரிகையாளர்கள் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு நிதி உதவி அளிக்கப்படுகிறதா? அங்கீகார அட்டை இல்லாத பத்திரிகையாளர்களுக்கும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுமா? அவர்களுக்கு சலுகை விலையில் வீடோ வீட்டுமனையோ வழங்கும் திட்டமிருக்கிறதா? என்று மாநிலங்களவையில் தி.மு.க. எம்.பி., டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு கேள்வி எழுப்பி இருந்தார்.

இதற்கு ஒன்றிய செய்தி ஒலிபரப்பு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அனுராக்தாக்கூர் அளித்த பதில்:

பெரும் நோய்களால் அவதிப்படும் பத்திரிகையாளர்களுக்கு உயர் சிகிச்சைக் காகவும், விபத்தால் உயிரிழப்புக்கோ, நிரந்தர முடக்கத்திற்கோ ஆளாகும் பத்திரிகையாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு ஒரு முறை நிவாரணமாகவும் நிதி உதவி பத்திரிகையாளர்களுக்கான நலத்திட்டத்தின் கீழ் வழங்கப் படுகிறது.



மத்திய மாநில அரசுகள் மூலம் அங்கீகார அட்டை பெற்ற பத்திரிகையாளர்கள் மட்டுமின்றி, அந்த அட்டை இல்லாத பத்திரிகையாளர்களுக்கும் இந்த நிதி உதவி வழங்கப்படுகிறது.

பத்திரிகையாளர்களுக்கு வீட்டு மனையோ, சலுகை விலையிலான வீடுகளோ அளிக்கும் திட்டம் எதுவும் ஒன்றிய அரசிடம் இல்லை. பத்திரிகையாளர்களுக்கு பென்ஷன் வழங்கும் விஷயம் என்பது அவர்கள் பணிபுரியும் நிறுவனத்தின் நடைமுறைகளுக்கு உட்பட்டது. இதில் அரசுக்கு எந்தத் தொடர்பும் இல்லை.

இவ்வாறு அனுராக்தாக்கூர் பதிலளித்தார்.



சென்னை, எழும்பூர் மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி மைதானத்தில் ஆசிய ஆடவர் ஹாக்கி கோப்பை சென்னை 2023 போட்டியின் இரண்டாவது நாளான நேற்று (4.8.2023) சீனா, மலேசியா அணிகளுக்கிடையே நடைபெற்ற போட்டியை உயர்கல்வித்துறை அமைச்சர்க. பொன்முடி தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் மற்றும் ஹாக்கி இந்தியா நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. கோரிக்கையை ஏற்று

# சேலம் - செங்கப்பள்ளி நெடுஞ்சாலை 6 வழிச்சாலையாக விரைவில் மாற்றப்படும்!

## இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத் தலைவர் சந்தோஷ்குமார் யாதவ் உறுதி!

நாமக்கல், ஆக. 5-

கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி கோரிக்கையை ஏற்று சேலம் முதல் செங்கப்பள்ளி வரையிலான நெடுஞ்சாலை (NH 544) விரைவில் 6 வழிச்சாலையாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணைய தலைவர் சந்தோஷ்குமார் யாதவ் உறுதியளித்துள்ளார்

சேலம் முதல் செங்கப்பள்ளி வரை, தென்னிந்தியாவில் உள்ள சேலம் கொச்சி நெடுஞ்சாலையின் (NH 544) ஒரு பகுதியாகும். கேரளாவிற்கு உள்நாட்டு வேளாண் மற்றும் கோழி ஏற்றுமதி இந்த நெடுஞ்சாலை வழியாக மட்டுமே கொண்டு செல்லப்படுகிறது. தோராயமாக, 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வணிக வாகனங்கள் (மல்டி ஆக்சில்) மற்றும் அதிகமான உள்நாட்டு மற்றும் பயணிகள் வாகனங்கள் இந்த 103 கிமீ தூரத்தைக் கடந்து கோயம்புத்தூரை அடைகின்றன. 15க்கும் மேற்பட்ட பல்வேறு கல்வி நிறுவனங்கள், கல்வி பணிகளுக்காக தங்களுடைய சொந்த போக்குவரத்து வாகனங்களை இயக்கி வருகின்றன.

நாளுக்கு நாள், இந்த வழித்தடத்தில் போக்குவரத்து அதிகரித்து வருவதுடன், பெரிய விபத்துக்கள் போன்ற பல்வேறு காரணங்களால் வாகனங்கள் தடைபடுவது அடிக்கடி ஏற்படுகிறது. சராசரியாக ஒவ்வொரு வாகனமும் குறைந்தபட்சம் 30 நிமிடம் முதல் 45 நிமிடம் வரை தினமும் இலக்கை அடையச் செலவழிக்கிறது. எனவே இந்த உள்கட்டமைப்பின் தேவைகள் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு தற்போதுள்ள 4 வழிச் சாலையை 6 வழிச் சாலையாக மாற்ற வேண்டும் என தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திடம் (NHAI) நாமக்கல் கிழக்கு மாவட்ட செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர். என்.இராஜேஸ்குமார் கேட்டுக் கொண்டார். இந்த முயற்சி மாசு அளவைக் குறைப்பது மட்டுமல்லாமல், சுமார் 1 லட்சம் லிட்டர் எரிபொருளையும் மிச்சப்படுத்துகிறது. இக் கோரிக்கையினை இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணைய தலைவர் சந்தோஷ் குமார் யாதவ் ஏற்றுக் கொண்டு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி அளித்துள்ளார்.



சேலம் முதல் செங்கப்பள்ளி வரையிலான நெடுஞ்சாலை (NH 544) 6 வழிச்சாலையாக மாற்ற வேண்டும் என நாமக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணைய தலைவர் சந்தோஷ்குமார் யாதவை நேரில் சந்தித்து கோரிக்கை விடுத்தார். அதற்கு அவர், 6 வழிச்சாலையாக மாற்ற விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி அளித்தார்.